தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19-A, ருக்மினி லட்சுமிபதி சாலை (மார்ஷல் சாலை), எழும்பூர், சென்னை-600 008.
தொலைபேசி : ++91-044-2841 1376 / 2841 1378 / 2841 1379 தொலைநகல் : ++044-2841 1377
மின்னஞ்சல் : tnerc@nic.in இணையதளம் : www.tnerc.gov.in

# செய்திக் குறிப்பு

எண். 13 / 2010
நாள் 31-7-2010

பொருள் : தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மின் கட்டண ஆணையை வெளியிடுதல்.

*******

தமிழ்நாடு மின்சார வாரியம் 7 ஆண்டுகளுக்குப் பின்பு, 18-1-2010 அன்று மின்கட்டணத்தை மாற்றியமைப்பதற்கான மனுவை தாக்கல் செய்தது. இதற்கு முன்பான மின்கட்டண ஆணை 16-3-2003 அன்று நடைமுறைக்கு வந்தது. குறைபாடுகளை சரிசெய்த பின்பு, ஆணையம் 09-2-2010 அன்று மனுவை விசாரணைக்கு எடுத்தது. வாரியமானது மின் கட்டணம் குறித்த பொது அறிவிப்பினை, 26-02-2010 அன்று முக்கியமான செய்தித் தாள்களில் வெளியிட்டது. மின்கட்டண மனுவானது, மின் வாரியம் மற்றும் ஆணையத்தின் இணையதளத்திலும் வெளியிடப்பட்டது. சம்பந்தப்பட்டவர்கள் அனைவரிடமிருந்து கருத்துரைகளும் குறிப்புரைகளும் 25-3-2010 வரை பெறப்பட்டன.

2. ஆணையத்தின் மாநில ஆலோசனைக்குழு 11-3-2010 அன்று மின்கட்டண கருத்துருவை பரிசீலனை செய்தது. மின்கட்டண மனு தொடர்பான பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டங்கள், 30-3-2010 அன்று சென்னையிலும், 8-4-2010 அன்று மதுரையிலும், 13-4-2010 அன்று கோயம்புத்தூரிலும், 15-4-2010 அன்று திருச்சிராப்பள்ளியிலும், நடைபெற்றன. கருத்துக்கேட்புக்கூட்டத்தில் பெருமளவில் பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களுடைய கருத்துக்களை தெரிவித்தனர்.

3. பின்னர், ஆணையம், 23-6-2010 அன்று தெற்கு ரயில்வே போன்ற முக்கிய சம்பந்தப்பட்டவர்கள், மற்றும் 29-6-2010 அன்று தமிழ்நாடு அரசின் எரிசக்தி, நிதி

மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறைகளின் செயலாளர்கள், மற்றும் தமிழ்நாடு மின் வாரியத்தின் தலைவர் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தை நடத்தியது.

4. மின்கட்டணங்கள் தற்போது பின் வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இது 2010ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். மின் வாரியத்தின் மனுவானது, சில்லறை மின்கட்டணத்தை மாற்றியமைப்பதற்கு மட்டுமே இருந்தபோதிலும், ஆணையம் ஒருபடி மேலாகச் சென்று மின்உற்பத்தி, மின்செலுத்தல் மற்றும் மின்பகிர்மானம் ஆகியவற்றிற்கான மின்கட்டணத்தை நிர்ணயித்துள்ளது.

5. இரண்டு மாதத்திற்கு 600 யூனிட்களுக்கு குறைவாக மின்சாரம் பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர், குடிசைவாசிகள், விசைத்தறி மின் நுகர்வோர், கைத்தறி மின் நுகர்வோர், பொது வழிபாட்டிடங்கள், மற்றும் வேளாண் மின் நுகர்வோர் ஆகியோருக்கு எந்த விதமான மின் கட்டண உயர்வும் இல்லை.

6. இரண்டு மாதத்திற்கு 600 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோருக்கு யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. தொழில் மின் நுகர்வோரில், உயர் அழுத்த வகையினருக்கு யூனிட் ஒன்றுக்கு 50 காசுகளும் மற்றும் தாழ்வழுத்த வகையினருக்கு யூனிட் ஒன்றுக்கு 30 காசுகளும் மின் கட்டணம் உயர்த்தப்படுகிறது. இரண்டு மாதத்திற்கு 1500 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்தும் குடிசைத் தொழில் மற்றும் குறுந்தொழில் மின் நுகர்வோருக்கு மின்கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 40 காசுகள் மட்டும் உயர்த்தப்படுகிறது. இரண்டு மாதத்திற்கு 1500 யூனிட்டுகளுக்குக் குறைவாக மின்சாரத்தைப் பயன்படுத்தும் தொழில் மின் நுகர்வோரின் தாழ்வழுத்த வகையினருக்கு மின்கட்டண உயர்வு இல்லை.

7. வணிக மின் நுகர்வோரின் உயர் அழுத்த வகையினர் யூனிட் ஒன்றுக்கு கூடுதலாக 80 காசுகள் செலுத்துவர். வணிக மின் நுகர்வோரின் தாழ்வழுத்த வகையினர் யூனிட் ஒன்றுக்கு கூடுதலாக 70 காசுகள் செலுத்துவர். உயர்அழுத்த வகை சினிமா திரையரங்கினருக்கு யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. தாழ்வழுத்த வகையினருக்கு யூனிட் ஒன்றுக்கு ரூ.1.10 காசுகள் உயர்த்தப்படுகிறது. இரண்டு மாதத்திற்கு 200 யூனிட்டுகளுக்குக் குறைவாக மின்சாரத்தைப் பயன்படுத்தும் (தாழ்வழுத்த வகை) வணிக மின் நுகர்வோருக்கு மின் கட்டண உயர்வு இல்லை. இரண்டு

மாதத்திற்கு 100 யூனிட்டுகளுக்குக் குறைவாக மின்சாரத்தைப் பயன்படுத்தும் சிறு கடை வியாபாரிகளுக்கு மின்கட்டணம் யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் குறைக்கப்படுகிறது.

8. (உயர் அழுத்த வகை ) தனியார் கல்வி நிறுவனங்களுக்கு, யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. (உயர் அழுத்த வகை ) அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கு யூனிட் ஒன்றுக்கு 50 காசுகள் உயர்த்தப்பட்டுள்ளது. தனியார் கல்வி நிறுவனங்களுக்கு (தாழ்வழுத்த வகை) யூனிட் ஒன்றுக்கு கூடுதலாக 1 ரூபாய் 10 காசுகள் உயர்த்தப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கு (தாழ்வழுத்த வகை) யூனிட் ஒன்றுக்கு 40 காசுகள் உயர்த்தப்பட்டுள்ளது.

9. தற்போது, வீட்டு மின் நுகர்வோருக்கு யூனிட் ஒன்றுக்கு 35 காசுகள் முதல் 1 ரூபாய் 70 காசுகள் வரையிலும், கைத்தறி நெசவாளர்களுக்கு 1 ரூபாய் 10 காசுகள் முதல் 1 ரூபாய் 30 காசுகள் வரையிலும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 1 ரூபாய் 40 காசுகளும் மற்றும் வேளாண் மின் நுகர்வோருக்கு குதிரைசக்தி ஒன்றுக்கு 250 ரூபாயையும் அரசு மானியத்தொகையாக வழங்குகிறது. நடப்பு ஆண்டிற்கான அரசின் மொத்த மானியத்தொகை ரூ.1652/-- கோடிகளாகும்.

3/7/2010

(மா. வேலாயுதபெருமாள்)
உதவிச் செயலாளர்

Existing and New Tariff (Category wise) - Low Tension

| Sl.No | Category | Tariff | Exisiting Rate | | | New Tariff | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Demand Charges | Fixed Charges | Energy Charges | Demand Charges | Fixed Charges | Energy Charges |
| | | | (Rs / kVA / Month) | (Rs / Month) | (Ps / Unit) | (Rs / kVA / Month) | (Rs / Month) | (Ps / Unit) |
| 1 | Domestic | I A | | | | | | |
| | 0-50 units bi monthly | | | | 110 | | | 110 |
| | 51-100 units bi monthly | | | | 130 | | | 130 |
| | 101-200 units bi monthly | | | 5 | 260 | | | 260 |
| | 201-600 units bi monthly | | | 5 | 350 | | | 350 |
| | 601 units and above bi monthly | | | 5 | 475 | | | 575 |
| 2 | Huts | I B | | 10 | | | 10 | |
| 3 | Bulk supply | I C | | | 350 | | | 400 |
| 4 | Public Lighting and Water Supply (village panchayat) | II A | | | | | | |
| | - Village / Town Panchayat | | | | 340 | | | 340 |
| | - Municipalities / Corporations | | | | 350 | | | 350 |
| 4 | Govt. and Aided Educational Institutions | II B (1) | | 20 | 440 | | 20 | 480 |
| 5 | Cinema Theatre & Studios and Private educational Institutions | II B (2) | | 20 | 440 | | 20 | 550 |
| 6 | Places of Pub. Worship | II C | | 10 | 300 | | 10 | 300 |
| 7 | Cottage and Tiny Industries | III A (1) | | | | | | |
| | 0-500 units bi monthly | | | 30 | 180 | | 30 | 180 |
| | 501-1500 units bi monthly | | | 30 | 270 | | 30 | 270 |
| | 1501 units and above bi monthly | | | 30 | 310 | | 30 | 350 |
| 8 | Power Looms | III A (2) | | | | | | |
| | 0-500 units bi monthly | | | 30 | 140 | | 30 | 140 |
| | 501-1500 units bi monthly | | | 30 | 225 | | 30 | 225 |
| | 1501 units and above bi monthly | | | 30 | 250 | | 30 | 250 |
| 9 | Industries | III B | | | | | | |
| | 0-1500 units bi monthly | | | 30 | 400 | | 30 | 400 |
| | 1501 units and above bi monthly | | | 30 | 470 | | 30 | 500 |
| 10 | Agriculture | IV | Rs 250 / HP / annum | | | Rs 250 / HP / annum | | |
| 11 | Commercial | V | | | | | | |
| | 0-100 units bi monthly | | | 30 | 530 | | 30 | 430 |
| | 101-200 units bi monthly | | | 30 | 530 | | 30 | 530 |
| | 201 units and above bi monthly | | | 30 | 580 | | 30 | 650 |
| 12 | Temporary supply | VI | | | 700 | | | 1050 |

Existing and New Tariff (Category wise) - High Tension

| Sl.No | Category | Tariff | Exisiting Rate | | | New Tariff | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Demand Charges | Fixed Charges | Energy Charges | Demand Charges | Fixed Charges | Energy Charges |
| | | | (Rs / kVA / Month) | (Rs / Month) | (Ps / Unit) | (Rs / kVA / Month) | (Rs / Month) | (Ps / Unit) |
| HIGH TENSION | | | | | | | | |
| 1 | Industries | I A | 300 | | 350 | 300 | | 400 |
| 2 | Railway Traction | I B | 300 | | 350 | 250 | | 400 |
| 3 | Govt. and aided educational institution | II A | 200 | | 350 | 200 | | 400 |
| 4 | Cinema Theatre & Studios and Private educational institutions | II B | 200 | | 350 | 200 | | 450 |
| 5 | Places of Public Worship | II C | 125 | | 280 | 125 | | 280 |
| 6 | Commercial | III | 300 | | 500 | 300 | | 580 |
| 7 | Lift Irrigation | IV | 0 | | 50 | 0 | | 50 |